gistered No. M. 2330

"SIDDHANTHAM"

Vol. 39—No. 10

# சித்தாந்தம்

**சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு**

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

லர் 39 | பராபவ ஐப்பசி 1966 அக்டோபர் | இதழ்

உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களின் மணிவிழா ... | 253 |
| திரு க. அ. முதலியார் அவர்களின் எண்பதாண்டு நிறைவு ... | 256 |
| பெருவாழ்வு வாழ ... | 258 |
| வாலாஜாபாத் இந்துமத பாடசாலை பொன்விழா ... | 261 |
| திருவான்மியூர் ... | 262 |
| திருஞானசம்பந்தர் கூறும் தமிழர் சமயம் ... | 269 |
| அம்பிகை மாலை ... | 276 |
| விநாயக தத்துவம் ... | 280 |


பத்திராசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,

உதவிப் பத்திராசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா 3 | தனிப்பிரதி 25 கா

66
39

Reg M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 39 | பராபவ ஐப்பசி 1966 அக்டோபர் | இதழ் 10

## தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களின் மணிவிழா

(ஆசிரியர்)

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் செயலாளரான திருச்சிற்றம்பல இல்லம்—கிழக்கு மருதூர்—நாராயண சாமி நாயுடு அவர்களின் அறுபதாண்டு நிறைவு விழா 16—10—1966 அன்று சிதம்பரத்தில் நடைபெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நாயுடு அவர்கள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தோடு நீண்ட காலம் தொடர்புகொண்டு பல துறைகளில் அதன் நலனுக்காக உழைத்தவர்கள். துணைத் தலைவ ராகச் சில ஆண்டுகளும் செயலாளராக 1951 இலும் இருந்து, இப்பொழுதும் செயலாளராக இருந்து வருகி றார்கள்.

புதுச்சேரியை அடுத்த திருச்சிற்றம்பலம் என்ற ஊர் இவர்களுக்குப் பூர்வீகமான இடம். பின் இவர் முன் னோர் திருநாவலூருக்கும் திருவாமூருக்கும் இடையி லுள்ள கிழக்கு மருதூருக்குச் சென்று விட்டனர். பின்னர் இவர்கள் நெடுங்காலமாகக் கடலூரிலேயே இருந்து வருகிறார்கள். கம்மாளர் நாயுடு குலத்தில்

பிறந்த இவர் பரம்பரையாகச் சைவ சமயத்தைப் பின் பற்றி ஒழுகுபவர். இவருடைய தாய்வழிப் பாட்டியாருக்கு ஞானியார் சுவாமிகளிடம் இருந்த ஈடுபாடு காரணமாக, குழந்தைப் பருவம் முதற் கொண்டே இவருக்கும் சுவாமிகள் தொடர்பு ஏற்பட்டு, சைவப்பற்று வளர்ந்து வரக் காரணமாயிருந்தது. மாணுக்கர் நிலையில் இவர் தமிழில் பற்றுமிக்கவராகி எல்லா முன்னேற்ற இயக்கங்களிலும் கலந்து, திரு. வி. கல்யாணசுந்தரனாரின் மெய்த் தொண்டரானார். அவர் மூலம் சமாஜத்தொடர்பு பெற்று, அத் தலைமுறையில் இருந்த சைவப் பெரியார், தமிழறிஞர் அனைவருடைய தொடர்பையும் பெற்றிருந்தார். திருப்பாதிரிப்புலியூர், திருவெண்ணெய்நல்லூர், திருவதிகை சமாஜ மகா நாடுகள் சிறப்பாக நடைபெறவும், ஞானியார் சுவாமிகள் அறுபதாண்டு விழாவும், பட்டமேற்ற பொன் விழாவும், வெற்றி பெறவும் இவருடைய உழைப்பு மிக அதிகம். தம்முடைய திருமணத்தின் போது (1930) சமாஜத்தின் வெள்ளி விழாவைத் தாமே நடத்த இசைந்தார். அப்போது திரு. வி. க பேசிய பேச்சே "நினைப்பவர் மனம்" என்ற நூலாகப் பின் வெளிவந்தது. இவருடைய உதவியால் வெளி வந்த தமிழ் நூல்கள் மிகப் பல. குறிப்பிடத் தக்கவை கா. சுப்பிரமணிய பிள்ளை எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு, பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் எழுதிய திருவாசகம்:—திருச்சதக உரை, சமாஜ வெளியீடுகளாகிய சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி, சுந்தரேச வாண்டையார் தொகுத்த கல்வெட்டுத் தொகுப்பு, மு. வரதராசனார் எழுதிய வள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் முதலியவை.

இருபத்து நான்குமணி நேரமும் சைவ முன்னேற்றம் பற்றிய சிந்தனையே உடையவர் நாயுடு. திருமுறைகளில் உள்ள ஈடுபாட்டின் காரணமாக, ஒவ்வொரு திருமுறைக்கும் சுமார் 10 பாடல் கொண்ட திரட்டு 10 – 20 காசு விலையில் வெளியிட்டார். இவ்வாறு வெளியிட்டவை 12 திருமுறைக்கும் 12 திரட்டு, தாயுமானவர், இராமலிங்கர், ஆழ்வார் பாடல்கள், தேவி தோத்திரங்கள், முருகன் தோத்திரங்கள் முதலானவை.

தலயாத்திரையில் மிக்க பற்றுடையவர். கையில் குடையும் பையும் பிடித்துக் கொண்டு கால் நடையாகவே இவர், செல்லமுடியாத கோயில்களுக்கெல்லாம் சென்று தரிசிக்கிருர். ஆங்காங்குள்ள ஐதிகங்கள், வழிபாட்டுச் சிறப்புக்கள், விழாக்கள் முதலியவற்றை நன்கு ஆராய்ந்து அறிந்திருக்கிருர். யாத்திரை சென்று வருவோருக்கு உதவியாகக் குறிப்புகள் எழுதி, தென்னுர்க்காடு ஜில்லாத் தலங்களுக்கு வெளியிட்டார். ஏனையவையும் விரைவில் வெளியிடலாம்.

பொது வாழ்க்கையில் இவர் பல கூட்டுறவுச் சங்கங்களில் பங்கு கொண்டு இயக்குநராக இருந்து வந்திருக்கிருர். திருப்பாதிரிப்புலியூர் சிவாலயம், வடலூர் சத்திய ஞான சபை முதலியவற்றில் அறங் காவலராகப் பணி புரிந்து அவற்றை நல் முறையில் நடத்தி வந்திருக்கிருர்.

ஞானியாரிடத்தில் சில நாட்கள் முறையாகப் பாடம் கேட்டவர். சமய ஆராய்ச்சி மிக்கோரைத் தேடிக் கண்டு பல பொருள்களை விளுவித் தெளிந்து கொள்வதில் விருப்பமுடையவர். அப்படியே வைணவப் பெரியார்களிடத்தில் ஈடுபட்டு அறிவைக் கிரகிக்கும் பழக்கமுடையவர்.

சைவத்தில் மிக்க ட்ற்று என்பதோடு, நூல்களில் மிக்க ஆராய்ச்சி யுடையவர். எந்தப் பொருளைக் கேட்டாலும், இன்ன நூல் இன்னுர் செய்தது என்றெல்லாம் விரிந்து பரந்த அறிவோடு சொல்லக் கூடியவர். புத்தகங்களை அதிகமாகச் சேகரிக்கும் இயல்புடையவர். சிங்கப்பூரிலுள்ள மலாயா சர்வகலாசாலைக்கும் கொப்பனுப்பெட்டி மகளிர் கல்லூரிக்கும் பெரும் அளவில் புத்தகங்களை நன்கொடையாக வழங்கி யிருக்கிருர்.

நாயுடு அவர்களின் வாழ்க்கையில் தத்துவம் மேலோங்கி நிற்பதைக் காணலாம். வடமொழிவாணர் சத்சங்கம் என்பார்கள். "நின் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரிவாய்'' என்ருர் மாணிக்கவாசகர். தொண்

டரோடு கூட்டு கண்டாய்" என்பது தாயுமானவர் வாக்கு. "நல்லோ ரிணக்கமும் நின் பூசை நேசமும் ஞானமும் அல்லாது வேறு நிலையுளதோ!" என்ற பட்டினத்தார் திருமொழியைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகினார் இவர். தாம் இவ்வாறு நல்லோர் இணக்கம் கொண்டதன்றி நல்லோர் பலரையும் ஒருவரோடொருவர் இணங்கும்படி பிணைத்துவைத்தார். நட்பைக் காணுவதில் இன்பம் காண்பவர் என்று இவரைச் சொன்னால் மிகையாகாது.

நண்பர் நாயுடு அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் சிறந்த தொண்டு செய்து வர இறைவன் அருள் பாலிப்பாராக*.

---

*சஷ்டியப்த பூர்த்தி விழாவானது சிதம்பரம் ந. சிவப்பிரகாச தேசிகரைக் கொண்டு பூரணமாகச் சாஸ்திரோக்தமாக நிகழவிருக்கிறது. விழா முறையைக் கண்டு தெரிந்து கொள்ளும் விருப்பமுடையவர்கள் தாராளமாய் வந்து கலந்து கொள்ளலாம்.

---

# திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்களின் எண்பதாண்டு நிறைவு

(ஆசிரியர்)

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் தலைவராகவும் செயலாளராகவும் இருந்து, இப்போது துணைத் தலைவராக இருந்து வரும் திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்களின் எண்பதாண்டு 12-9-66 அன்று நிறைந்தது. அவர்களுக்கும் அவர்கள் மனைவியார் ஆதிலக்ஷ்மி அம்மையாருக்கும் நமது வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்

இவர்கள் அரசாங்கத்தில் பெரிய உத்யோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள். இளமை முதல் சீலமான கடவுள் திருவடி பற்றுக்கோடாகக் கொண்ட வாழ்க்கையை மேற் கொண்ட இவர்கள் பல ஆண்டு காலம் சென்னையில் தொழில் புரிந்தார்கள். மாம்பலத்தில்

வைத்தியராமன் தெருவில் உள்ள இவர்கள் வீடு சில காலம் ஞானியார் சுவாமிகள் தங்கு மிடமாக இருந்தது. அது வீடன்று; ஞானசாரியார் அருளுபதேசம் செய்கின்ற மடம் என்றே சொல்லத் தக்கதாயிருந்தது. சுவாமிகள் காலை தோறும் கந்தரனுபூதி போன்ற நூல்களுக்கு விளக்கம் கூறுவார்கள். குறிப்பிட்ட சில மாணக்கர்கள் அங்கு இருப்பார்கள்; மாணக்கர்களில் முக்கியமானவர்கள் முதலியாருடைய மனைவியார் ஆதிலக்ஷ்மி அம்மையாரும், அவர்களுடைய மகள் காமாட்சி அம்மையாரும் என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி. மாலை தோறும் பெரிய புராணச் சொற்பொழிவு போன்ற பிரசங்கங்கள் நடைபெறும். இப்படி வீட்டையே ஒரு ஞான சபையாக ஆக்கியிருந்த முதலியார் அவர்கள் ஓய்வு பெற்றதும் பழனி முருகன் திருமலை அடிவாரத்தில் தமக்கென்று ஓர் இல்லம் வைத்துக் கொண்டு அதற்குத் ''திருவடி'' என்று பெயர் சூட்டி அங்கே வானப் பிரத்த வாழ்க்கை நடத்துவது மிகவும் பொருத்தமே.

இவர்களுக்குச் சிவஞான போதத்தில் உள்ள ஈடுபாடு எல்லை அற்றது. சிவஞான போதமே தமிழரின் ''தொல்வரவு'' என்று கூறுவார். மறுத்துப் பேசுபவர் அவரிடம் தோல்வி யடையாமல் தப்புவது கஷ்டம்! அவ்வளவு இளமையும், வீரமும் அவர் சொற்களில் வெளிப்படும். ''சிவஞான போத எளிய உரை'' தாமே எழுதி வெளியிட்டிருக்கிறார். பழனியில் சில ஆண்டுகளுக்கு முன் (1961) சமாஜ மகாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு இவர் முக்கிய காரணர்.

சமாஜ அன்பர்கள், இவருடைய மனைவியும், மகளும் பல மகா நாடுகளில் பேசியதையும், தலைமை வகித்துப் பேசியதையும் நன்கு அறிவார்கள். இந்த அளவு சமயத்திலே தோய்ந்த குடும்பம் காண்பது அருமை. இவர்கள் இல்லற வாழ்க்கையின் நயமே தனிச் சிறப்புடையது.

எண்பதாண்டான இந்த இளைஞர் வாழ்க; பல்லாண்டு பல்லாண்டு பல கோடி நூறாயிரம் ஆண்டு வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

---

# பெருவாழ்வு வாழ

(துணையாசிரியர்)

மண்ணின்மிசை வான்பொய்த்து நதிகள்தப்பி
 மன்னுயிர்கள் கண்சாம்பி உணவுமாறி
விண்ணவர்க்கும் சிறப்பில்வரும் பூசையாற்ரு
 மிக்கபெரும் பசிஉலகில் விரவக்கண்டு
பண்ணமரு மொழிஉமையாள் முலையின்ஞானப்
 பாலரு வாயருடன் அரசும்''பார்மேல்
கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினோர்க்கும்
 கவலைவரு மோ?'' என்று கருத்திற் கொண்டார்.

மேலே உள்ள செய்தி நம் தண்டமிழ் நாட்டில் இற்றைக்கு ஏறக்குறைய 1400 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்ததைப் பற்றி நம் சேக்கிழார் பெருமானால் குறிப்பிடப்பட்டதாகும். அவ்வமயம் தமிழ்நாடு இருந்த நிலை என்ன? 1. (வான்பொய்த்து) காலா காலத்து மழை பெய்யவில்லை. 2. (நதிகள் தப்பி) அதனால் நதிகளில் நீர் பாய்வதற்கும் வாய்ப்பில்லை. 3. (மன்னுயிர்கள் கண் சாம்பி) நீரின்றியமையா யாக்கையாதலின் உயிர் வாழ முடியாது, எல்லா உயிர்களும் அழிந்தன. 4. (உணவு மாறி) உண்ண உணவும் கிடைக்கவில்லை. 5 (விண்ணவர்க்கும் சிறப்பில் வரும் பூசையாற்ரு) கோவில்களிலும் திருவிழாக்களோடு படித்தரப் பூசைகளிலும் வழிபாட்டில் நிறைந்த நிவேதனம் முதலிய சிறப்புக்களின்றி அட்டிப் பட்டுள்ளது. 6, (மிக்க பெரும் பசி) எல்லாரும் பசித் துன்பத்தால் மிக வருந்தினர்.

இந் நிலையை இருபெரியோர்கள் கண்டனர். அவர் தாம் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசருமாவர். உடனே அவர்களுக்கு என்ன எண்ணம் உதித்தது? ''பார் மேல் கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினோர்க்கும் கவலை வருமோ?'' என்பதே அவ்வெண்ணம் ஆகும். அவர்கள்

பெருமானை நினைந்துருகி வழிபட்டனர். திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று மக்களுக்குக் கொடுத்து உணவுப் பொருள்களை வைத்துள்ளோரிடமிருந்து எவ்வளவு பணம் கேட்டாலும் கொடுத்து வாங்கி உண்டு உயிர் வாழச் செய்து அப்பஞ்சத்தைப் போக்கினர் என நம் சமய வரலாறும் பெரிய புராணம் கூறுகின்றது.

இனி தற்போதைய நிலைக்கு வருவோம். 1. மழையும் காலா காலத்தில் பெய்யவில்லை. 2. அதனால் ஆறுகளில் நீர் மட்டங்கள் குறைந்துள்ளன. உணவு விளைச்சலில்லை. 3. அது காரணமாக நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மக்கள் உயிர் வாழ்வது எப்படி எனத் துன்புறுகின்றனர். 4. பங்கீட்டு முறை வந்து கோதுமை, மைதா, ரவை முதலியன தரும் நிலை வந்துள்ளது. 5. கோயிலுக்கும் பங்கீட்டினால் வழக்கம்போல் உள்ள நிவேதனங்கள் முதலியன படைக்க முடியவில்லை. 6. அங்கங்கு மக்கள் பெரும் பசியாயிருக்கின்றனரெனவும் பங்கீட்டுணவு போதவில்லை எனவும் பலர் கிளர்ச்சி செய்கின்றனர்.

திருவீழிமிழலையில் மக்கள் துன்புற்ற காலத்து இரு பெருங்குரவர்கள் வந்து இயற்கையாக ஏற்பட்ட அப் பஞ்சத்தைப் போக்கி மக்களைக் காப்பாற்றினார்கள். தற்போது ஒரு ஞானிகூட நம் உலகில் இல்லையா? நம் மக்களுக்காக இறைவனிடம் மன்றாடக்கூடாதா? மன்றாடி நாட்டுப் பஞ்ச நிலையைப் போக்க அருள் நாட்டம் செய்ய வேண்டக்கூடாதா? என்பன போன்ற பல கேள்விகள் எழலாம்.

“எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கின்றதோ” என்பது கிராமங்களிடையே வழங்கும் ஒரு முதுமொழி. அது

போன்று யாராவது ஞானி எங்காவது இருக்கலாம். இல்லையென்றால் திருவள்ளுவர் வாக்கான,

பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்

என்பதும் பொய்த்துவிடும். புறநானூற்றுப் புலவரான இளம்பெருவழுதியின் "உண்டாலம்ம இவ்வுலகம்" என்னும் செய்யுளின் கருத்தும் பொய்யாகி விடும். ஆகவே ஞானிகள் இல்லையெனல் இயலாது.

அவ்வாறு இருந்தால் அவர்கள் மக்கள் படும் அல்லலைப் பார்த்தும் ஏன் தீர்க்க முயலவில்லை. அந்நிலையில்தான் உண்மை புலப்படும். மக்களுக்கு இன்னும் இறையருள் நாட்டம் போதவில்லை. எல்லாம் தாமே செய்வதாகக் கருதித் தன்முனைப்பு விஞ்சித் தலைவிரித்தாடுகிறது. கடவுட்பற்று குறைந்து கொண்டிருக்கிறது. அக்காரணம் கருதியே ஞானிகளும் திருவருள் நாட்டத்தால் உந்தப்பட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய முன் வராதுள்ளனர். உண்மையாய் மக்கள் இறைவனிடத்து அன்பு செலுத்தினால் ஞானிகளென்ன அக்கால நாயன்மார்களுக்கு நினைத்த இடத்து வந்தருள்செய்த அவ்விறைவனே தன் உருவோடு வந்தும் அருள் சுரப்பான் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. அத்தகைய நிலையை நாம் பெற்றுள்ளோமா? இல்லையெனில் பெறவாவது முயற்சி செய்கிறோமா? அவ்வாறு இறையன்பு நெறியைப் பின்பற்றி மக்கள் வாழின் எல்லாத்துன்பங்களும் நீங்கும், பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்கும். ஆதலால், "பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே."

வாழ்க உலகெலாம்.

☆ ★ ★

# வாலாஜாபாத்து இந்து மதபாடசாலை
# பொன் விழா

நம் தமிழ் நாட்டுக் கல்வி நிலையங்களுள் வாலாஜா பாத் இந்து மத பாடசாலை மிகச் சிறந்த தொன்றாகும். சமயக் கலப்போடுள்ள பெயரே யிருக்கக் கூடாது என ஒதுக்கு மிக் காலச் சூழ் நிலையில் நம் சமய ஆக்கம் கருதி ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே இந்து மத பாடசாலை என மன உறுதியோடு அப் பள்ளியை நிறுவ மூலகார ண்மா யிருந்த தீர்க்க தரிசனப் பெரியார்களை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். அப் பெயரமைவுக் கேற்ப நம் சமயச் சூழ் நிலையை இன்றும் அப்பள்ளியில் காண லாம். கிறித்தவர்கள் பல அநாதை விடுதிகள் நடத்து கின்றனரே! நம் சமயக் குழந்தைகளுக்கு அப்படி ஒன்றும் கிடையாதா? எனப் பலருக்குப் பல சமயங்களில் ஏக்கம் எழுந்ததுண்டு, "இதோ இருக்கின்றது" என முதன் முதலில் சுட்டிக் கூறும் தன்மை வாய்ந்ததாய்த் தோன்றியது நம் வாலாஜாபாத் இந்து மத பாடசாலை யேயாகும். பின்னர் இரண்டாவதாகத் திருப்பராய்த் துறை இராம கிருஷ்ணர் குடிலைக் கூறலாம்.

மேலும் இப் பாடசாலைக்கும் நம் சமாஜத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. சமாஜ ஆண்டு விழாக்கள் தோறும் யார் வந்தாலும் வரா விட்டாலும் இப் பாட சாலைத் தாபகர் அப்பா வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களை அவசியம் காணலாம். கொழும்பாயினும் காசி யாயினும் கன்னியாகுமரி யாயினும் மிக்க ஈடுபாட்டுடன் வந்து நம் சமாஜப் பலவூர் அன்பர்களைக் கண்டு பேசி அளவளாவுவதில் அவர்களுக்குள்ள மகிழ்ச்சி ஒரு தனித் தன்மை வாய்ந்தது. வாலாஜாபாத்தில் நிகழ்ந்த சமாஜ மாதக் கூட்டங்கள் எண்ணற்றன. 1959 ஆம் ஆண்டில் நம் சமாஜ 54 ஆம் ஆண்டு விழாவை மிகச்சீரிய முறை யில் நடத்தித் தந்த பெருமையும் அவர்களுக் குண்டு. மாணவர்களுக்கென சமயக் கோடை வகுப்பும் நம் சமாஜச் சார்பில் சில அந்தர்யோகங்களும் அங்கு நடந் தன. அவைகளை யெல்லாம் அவர்கள் மிக நன் முறை

யில் நடத்தித் தந்தார்கள். இதற்கெலாம் மேலாக அவர்களிடம் ஆயுள் ஒப்பந்தம் செய்து கொண்ட சமயப் பற்றுள்ள சைவர்கள் நூற்றுக் கணக்கானவர்களுக்கு தம் சொந்தப் பணத்தில் சந்தாக் கட்டி அவர்களை நம் சமாஜத்துறுப்பினர்களாக்கி நம் சித்தாந்த இதழையும் அனுப்பச் செய்கிறார்கள்.

இத்தகைய பெரியாரால் தோற்றுவிக்கப் பட்ட இந் நிலையம் அப்பா வா, தி, மா. அவர்களின் அயரா உழைப்பின் பயன் என்பதையும் யாவரும் ஞாபகத் திருத்த வேண்டும். அதற்கு அண்மையில் பொன் விழா நிகழ இருப்பது குறித்துப் பெரு மகிழ்வு ஏற்படுகிறது. உலகில் யாரும் முயன்றால் முன்னேறலாம் என்பதற்கு இந்நிலைய அப்பா ஓர் எடுத்துக் காட்டு. அவர்களை இந்நற் சமயத்து "இன்னும் ஒரு நூற்றாண்டிரும்" என்று வாழ்த்துவதோடு அந்நிலையம் என்றும் நின்று நிலவி இளஞ் சிறார்களுக்கு நம் சமயக் கொள்கைகளைப் பரப்பி நீடு சிறக்க எல்லாம் வல்ல பரம் பொருள் அருள் பாலிக்க, அவனிணையடிகளை வணங்கி வாழ்த்துகின்றோம்.

(துணையாசிரியர்)

# திருவான்மியூர்

(R. கோவிந்தராஜன், B. A.)

தொண்டை நாட்டிலுள்ள பாடல்பெற்ற சிவத்தலங்கள் முப்பத்திரண்டாகும். அவற்றுள் திருவான்மியூர் ஒன்று. இவ்வுண்மையை "........... ஈறில் திருவான்மியூர் ......... தொண்டை நன்னாட்டெண்ணின் முப்பான் இரண்டே" என்னும் 'திருப்பதிக் கோவையின் பதின்மூன்றும் செய்யுள் வலியுறுத்துகிறது. 'திருப்பதிகக் கோவை' யின் பன்னிரண்டாஞ் செய்யுளில் "............. வான்மியூர் ...... ..... பதிகம் மூன்றே" என வருதலால் திருவான்மியூரைப் பற்றிய தேவாரப் பதிகங்கள் மூன்றெனத் தெரிகிறது.

அவை அப்பர் சுவாமிகள் பாடிய பதிகமொன்றும் திருஞான சம்பந்தர் பாடிய பதிகங்கள் இரண்டுஞ் சேர்ந்து மூன்றாயின. நமக்குக் கிடைத்துள்ள பதிகங்கள் அம்மூன்றேதான். அப்பரும் திருஞானசம்பந்தரும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சமகாலச் சைவப் பெருமக்கள். ஆகவே, அச் சமய குரவர் இருவராலும் பாடப்பெற்ற திருவான்மியூர் இற்றைக்குச் சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழம்பதியென்பது போதரும். இதனை மேற் குறித்த 'ஈறில் திருவான்மியூர்' என்ற சொற்றொடர் மேலும் வலியுறுத்துகிறது.

தொல்காப்பியம் முதலிய சங்கத் தமிழ் நூல்களில் நிலம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலென நான்காக வகுக்கப்பட்டுள்ளது. குறிஞ்சியும முல்லையும் மருவி பாலையாயிற்றென்ப. நெய்தல் நிலமாவது கடலும் கடல் சார்ந்த இடமுமாகும். திருவான்மியூர் நெய்தல் நிலத்தைச் சார்ந்த ஒரு கடற்கரையூர். சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களுக்குள்ளேயே இந்நால்வகை நிலங்களும பொருந்திச் சைவ, வைணவத் தலங்களாகக் காட்சியளிக் கின்றன. சிவ தலங்களுள், குறிஞ்சிக்குத் திருக்கழுக் குன்றமும், முல்லைக்கு வட திருமுல்லைவாயிலும், மருதத் திற்குக் காஞ்சியும், நெய்தலுக்குத் திருவான்மியூர், திருமயிலை, திருவொற்றியூர் ஆகிய தலங்களும் எடுத்துக் காட்டுகளாகும்.

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் தனித் தனியே திருவான்மியூருக்குச் சென்றார்கள். அவர்கள் சென்ற வழியை அவரவர்தம் புராணத்தில் சேக்கிழார் தெளிவாகக் கூறுகின்றார். அப்பர் சுவாமிகள், "நீடு திருக் கழுக்குன்றில் நிருத்தனார் கழல் வணங்கி ...............மாடு பெருங்கடலுடுத்த வான்மியூர் மருங்கணைந்தார்." "திரு வான்மியூர் மருந்தைச் சேர்ந்து பணிந்தன்பினொடும் பெருவாய்மைத் தமிழ்பாடி............... மருவாரும் மலர்ச்

சோலை மயிலாப்பூர் வந்தடைந்தார்". "திருக்கயிலைச் சங்கரனார் தாள் வணங்கி............... திரைவளர் வேலைக்கரை போய்த் திருவொற்றியூர் சேர்ந்தார்." ஆளுடைய அரசின் இவ் யாத்திரையைச் சேக்கிழார் இரண்டு செய்யுள்களில் நயம்படக் கூறியுள்ளார். தேவாரப் பதிகங்களின் சமாஜப் பதிப்புக்களில் சிவநாம, சக்திநாம அட்டவணை யொன்று சேர்க்கப்பட்டுளது. அதில் திருவான்மியூரில் கோயில் கொண்டுள்ள சிவபரம்பொருளுக்கு 'மருந்தீசுவரர்' என்ற நாமம் தரப்பட்டுளது. அப்பர் பாடிய திருவான்மியூர்த் திருக்குறுந்தொகைப் பதிகச் செய்யுள் ஒவ்வொன்றும் 'வான்மியூரீசனே' என்று முடிகிறதேயன்றி 'மருந்தீசர்' என்ற பெயர் அப்பாடலில் காணப்படவில்லை. ஆகையால், 'மருந்தீசர்' என்ற பெயர் சேக்கிழாரின் அருள்மொழியாம் 'திருவான்மியூர் மருந்தைச் சேர்ந்து' என்ற சொற்றொடரின் அடிப்படையில் அமைந்ததெனக் கொள்ளலாம். அப்பர் பாடிய பதிகத்தை (5-82)ச் சேக்கிழார் 'பெருவாய்மைத் தமிழ்' என்று வியந்தோதிய பெருமை இறையருள் துணை கொண்டு அப்பதிகத்தை ஓதி உணர்வார்க்கன்றி நம்மனோர்க்கு எளிதில் புலப்படாது. எனினும், வான்மியூரீசனை வணங்கினால் 'பண்டுநீர் செய்த பாவம் பறைந்திடும்', 'மருளறுத்திடும்', 'வந்து நின்றிடும்', 'வினை மடங்க நின்றிடும்', 'வஞ்சந்தீர்த்திடும்', 'வாதை தீர்த்திடும்', 'வாட்டந் தீர்த்திடும்' என்ற அப்பரின் வாய்மொழி மாண்பைச் சேக்கிழார் 'பெருவாய்மைத் தமிழ்' என்று பாராட்டியது சாலப் பொருந்துமன்றோ?

திருஞானசம்பந்தர் திருவான்மியூரையடைந்த யாத்திரையைச் சேக்கிழார் ஆறு செய்யுள்களில் விரிவாகக் கூறியுள்ளார். திருமயிலையில், சிவநேசர் திருமகளார் பூம்பாவையின் எலும்பைப் பெண்ணுருவாக்கி, அப் பாவையைத் திருமணம் புணர்ந்தருள வேண்டிய வணிகரின் வேண்டுகோளை மறுத்து, அவர் வருத்தம் அகன்றிட மதுரமொழி அருளி விடைகொடுத்துப் புகலிவேந்தர் அப்பதியை யகன்று

திருவான்மியூர் பணிய அணைவுற்றார். அவ்வூர்த் திருத்தொண்டர்கள் மங்கல அணிகளுடன் எதிர்கொள்ள, ஞானசம்பந்தர் அவ்வூருக்கருகில் சிவிகையை விட்டிழிந்து, தம்மை வணங்கினோரைத் தாமும் தொழுது கோபுரவாயிலையடைந்தார். கோபுரத்தை வணங்கித் திருமுன்றில் புகுந்து கோயிலை வலம் வந்து, செஞ்சடையார் சேவடியின் கீழ்த் தாழ்ந்தார். "தாழ்ந்து பலமுறை பணிந்து தம்பிரான் முன்னின்று வாழ்ந்து களிவரப் பிறவி மருந்தான பெருந்தகையை" விஞவுரையால் இசைப்பதிகச் சொன்மாலை சாத்தி இன்புற்றார். சில நாள் அங்கமர்ந்து "உலகாளுடையாரை அருந்தமிழின் பொங்கும் இசைப் பதிகங்கள் பல போற்றி"ப் பிறபதிகளை வணங்கப் புறப்பட்டுத் திருவிடைச்சுரத்தைச் சேர்ந்தார்.

வான்மியூரீசனை அப்பர் சுவாமிகள் புராணத்தில் மருந்தெனப் பேசிய சேக்கிழார் ஞானசம்பந்தர் புராணத்தில் 'பிறவி மருந்தான பெருந்தகையை' என்று குறிப்பிட்டது தம் கருத்தை விளக்கி வலியுறுத்துவதாகும். மருந்தென்றால் நோயொன்று தொக்கி நிற்கவேண்டும். அந் நோய் தான் ஆன்மாவைப் பற்றிய பிறவி நோய். எனவே, பிறவி நோய்க்கு மருந்தான பெருந்தகை யென்று சேக்கிழார் வான்மியூரீசனைச் சுட்டினார். ஞான சம்பந்தர் திருவான்மியூரில் பாடிய இரண்டு பதிகங்களிலும் 'மருந்தீசர்' என்ற இறைவன் பெயருக்கு ஆதாரமில்லை. அப்பெயர் சேக்கிழாரின் புனைபெயரெனவே நாம் கொள்ளவேண்டும். திருக்கழுக்குன்றத்துச்சிவிலமர்ந்த வேதகிரீசுவரரைத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் தாம் பாடிய பதிகத்தில் 'பவரோகவயித்தியர்' என்றதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலதாம்.

ஞானசம்பந்தர் வான்மியூரீசனை முதன் முதலாக வணங்கிய பொழுது பாடியது விஞவுரைப் பதிகம். அது இரண்டாந்திருமுறையில் நான்காவது பதிகமாகும். இறை

வனைப் பற்பல வகையில் விளித்து, வரையுலாமட மாதுடனாகிய மாண்பு யாது? அந்தியின் ஒளியின் நிறமாக்கிய வண்ணம் யாது? யானையின் உரிபோர்த்து அனலாட உகந்ததேன்? வஞ்ச நஞ்சுண்டு வானவர்க் கின்னருள் வைத்ததேன்? வான்பிறைச் செஞ்சடையில் வைத்த வியப்பும் யாதோ? திரிபுரமெரித்த மொய்ம்பு யாதோ? இருக்கு வேதத்தை நால்வர்க்கு நீருரை செய்த தேன்? பூதங்களும் பேய்களும் உம் பக்கம் பயின்றதேன்? விடையேறிப் பலியேற்ற தெற்றுக்கு? வஞ்சனைடைய சமண் சாக்கியர் சைவத்தை மறுத்துக் கட்டுரைக்கின்ற தேன்? என்றெல்லாம் வினவி, நீர் இவ்வினாக்களுக்கு விடை கூறவேண்டும் என்று ஞானசம்பந்தர் அப்பதிகத்தில் இறைவனை வேண்டிக் கொள்ளுகிறார். ஆகையால், அப் பதிகம் வினாவுரையாயிற்று. அப்பதிகத் திருக்கடைக் காப்புச் செய்யுளில் "திருவான்மியூர் ஆதியெம்பெருமான் அருள் செய்ய வினாவுரை ஓதி அன்றெழு காழியுள் ஞான சம்பந்தன்" என வருதலால், அப்பதிகம் இறைவனை ஞான சம்பந்தர் முதன் முதலாக வணங்கிய பொழுது பாடப் பெற்றதென்பது புலனாகின்றது.

வினாவுரைப் பதிகத்தில்காணப்படும் திருவான்மியூரைப் பற்றிய இரண்டொரு சிறப்புகளை ஈண்டுக் காண்பாம். ஆடவரினும் மகளிரே கடவுள் வழிபாட்டில் சிறந்து நிற்பதை நாம் நந்தமிழ் நாட்டில் இன்றும் காண்கிறோம். திரு வான்மியூரில் ஏழாம் நூற்றாண்டில் குல மகளிரும், பதியிலார் குலத்தைச் சேர்ந்த கணிகை மாதரும் குழுமி அத்தலத்தைச் சிறப்பித்ததாக ஞானசம்பந்தர் தாம் பாடிய வினாவுரைப் பதிகத்தில் கூறுகிறார். புரிசைக்(மதில்)குள்ளே இறைவனது திருவோலக்கத்துடன் கோயில் வலம் வந்த மடவார்கள் நடமாடித் தந்தொழிலைச் செய்ய, புரிசைப் புறத்தில் தீதிலந்தணர் வேதமோதி ஈசனை வழிபட்டனர் என்கிறார் ஞானசம்பந்தர். திருவான்மியூர், கடல் தரும புது வருவாய்களால் புகழும், செல்வமுமிகுந்திருந்த ஊர்

என்பதை அப்பதிகத்தின் ஒன்பதாஞ் செய்யுள் நமக்கு அறிவிக்கின்றது. இயற்கை வருணனையிற் பண்பட்ட பிள்ளையார், திருவான்மியூரைச் சூழ்ந்த சோலைகளில் தவஞ் செய்வார்க்கு மாலையில் வண்டினம் சேர்ந்து ரீங்கார இசை கூட்டும் என்று பதிகத்தின் பத்தாஞ் செய்யுளில் பாடியது அத்தலத்தின் அமைதிமிக்க சூழலை எடுத்தேத்துகிறது. அதற்கு எடுத்துக்காட்டாகப் பாம்பன் ஸ்ரீமத் குமாரகுரு தாசர் தவஞ்செய்து சித்தி பெற்ற இடமும் அதைச் சேர்ந்த அறச்சாலையும் இன்றும் காட்சியளிக்கின்றன.

ஞானசம்பந்தர் திருவான்மியூரில் சில நாள் தங்கிய பொழுது அவர் அத்தல மூர்த்தியைப் போற்றிப் பாடிய பதிகங்களில் நமக்குக் கிடைத்துள்ள பதிகம் ஒன்றே. அதுதான் மூன்றாந் திருமுறையுள் ஐம்பத்தைந்தாம் பதிகமாகும். அப்பதிகத்தின் முதற்பத்துச் செய்யுள்களும் "உன்னையல்லால் அடையாதெனதாதரவே" என்று முடிகின்றன. எனது ஆதரவு உன்னையல்லால் அடையாது என்ற பிள்ளையாரின் அருள் வாக்கின் பொருளை நாம் உணர வேண்டும். 'ஆதரவு' என்ற சொல்லுக்கு விருப்பம் அல்லது அன்பு என்பது பொருளாகும். அன்புதான் மக்கள் யாக்கைக்கு ஆதாரவாய் (Support) அமைந்துளதென்ற உண்மையைத் திருவள்ளுவர் தாமியற்றிய திருக்குறளில் அறத்துப்பால் இல்லறவியலில் அன்புடைமையென்னும் அதிகாரத்தில் வரும் அடியிற் குறித்த,

1. "அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு"

என்ற மூன்றாங் குறளாலும்,

2. "அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்ற பத்தாங் குறளாலும் நன்கு விளக்கியுள்ளார்.

"உடம்போடு இயைந்தல்லது அன்பு செய்யலாகாமையின், அது செய்தற் பொருட்டு இத்தொடர்ச்சி உளதாயிற்று என்பதாம்" என்று பரிமேலழகர் மேற்குறித்த மூதற் குறளுக்கு எழுதியுள்ள விளக்கவுரை ஈண்டுச் சிந்தித்தற் குரியது. மனித யாக்கைக்கு அன்பு இன்றியமையாத ஆதாரவாகையால், அவ்வன்பை எப்பொருள் மீது செலுத்துவதென்பதே மனிதன் அறிய வேண்டியதொன்றாகும். நிலையிலாப் பொருள்கள் மீது நம்மன்பைச் செலுத்தாமல் நிலைத்த பொருளாம் இறைவன் மீது அதைச் செலுத்தலே சாலச்சிறந்ததாம். ஆயினும், அவனருளாலன்றி அவனிடத் தன்பு நமக்கு எழாது. ஆகவே, அவனருளை நாம் பெற வேண்டியவர்களாகிறோம். சைவத் திருமுறைகளை இடைவிடாதோதல் அவனருளைப் பெறும் உபாயங்களில் மிகச் சிறந்ததொன்றாம். திருவான்மியூர் மருந்தை, மேற்கூறிய பதிகத்தில் ஞானசம்பந்தர், அரையா!, அடிகேள்!, ஐயா!, அன்பா!, அண்ணா!, ஆதி!, ஆனாய்!, அறிவே!, அண்டா!, என்றெல்லாம் விளித்து 'உன்னையல்லால் அடையாதெனதாதரவே' எனப்பாடிய பதிகம் ஓதியோதி இன்புறற் பாலதாம். கடவுளையன்றி நான் வேறொருபொருளையும் அடையேன் என்று நேர்முகமாகக் கூறாமல் ஞானசம்பந்தர் 'உன்னையல்லால் அடையாதெனதாதரவே' என்று பாடிய பாட்டின் கருத்தாழத்தை நாம் நம்முள்ளத்தில் ஆழ்த்துவோமாக. பிள்ளையார் திருவான்மியூரில் பாடிய வினவுரைப் பதிகத்தின் முதற்செய்யுளில் இறைவனை 'உரையுலாம் பொருளாய் உலகாளுடையீர்' என்று சிறப்பித்ததையும், மற்றொரு பதிகத்தின் நான்காஞ் செய்யுளின் 'தென்பால் வையமெலாந் திகழும் திருவான்மி' என்று அத்தலத்தைச் சிறப்பித்ததையுங் கொண்டு 'திருவான்மியூர்' என்ற பெயருக்கு மிகச் சிறந்த சிவதலமென்ற பொருளே சிறந்த பொருளென்பது அடியேனுடைய கருத்து. அது தவறாயின், அறிஞர்கள் என் கருத்தைத் திருத்துவார்களாக.

வாழ்க தமிழ்! வளர்ந்தோங்குக சைவம்!

# திருஞான சம்பந்தர் கூறும் தமிழர் சமயம்

(வித்துவான், பெ. கோவிந்தன்)

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரும் தமிழர் சமய மாகிய சைவ சமய குரவராவர்.

திருஞான சம்பந்தர் காலத்தில் தமிழ் நாட்டில் பிரா மணர்கள் பலவூர்களில் குடியேறி வாழ்ந்தனர், அவர் கள் வேதங்கள் கூறும் வேள்விகளைச் செய்து வேத நெறியில் நின்றதோடு தமிழர் சமய நெறியில் ஒழுகிச் சிவ பெருமானைத் தமிழர் வழிபாட்டு முறையில் வழி பட்டனர்; தமிழர் சமயக் கோட்பாடுகளையும் மேற் கொண்டனர். இச் செய்திகளைத் திருஞான சம்பந்தர் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள் கூறுகின்றன.

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லை (1—80—1)

பொய்யா நாவின் அந்தணர் வாழும் புறவமே
(1—87—1)

கோலமலர் நீர்க்குடமெ டுத்துமறை யாளர்
நாலின்வழி நின்றுதொழல் பேணியநள் ளாறே
(2—33—6)

இனமல்கு நான்மறையோர் ஏத்தும் சீர்கொள்
இடைமருது (2—56—7)

நிதமரா அந்தணர்கள் பரவி ஏத்தும் திருநல்லூர்
(2—57—8)

திருஞானசம்பந்தர் தமிழர் சமய நெறியில் நின்று சிவனை வழிபட்ட நெறிகளையும் கோட்பாடுகளையும் அவர் பாடிய நளிய தேவாரப் பதியங்களிலிருந்து ஆராய் வது இக் கட்டுரையின் நோக்கம்.

திருஞான சம்பந்தர் பாடியருளிய தேவாரம் முழு மையும் சிவபெருமான் ஒருவனையே கடவுளாகக் கூறு கிறது; சிவனுடைய பல வடிவங்களையும், பல பெயர்களை யும், அடியார்க்குச் செய்த பல அருட் செயல்களையும் பல திருவிளையாடல்களையும் அவன் எழுந்தருளி யிருக் கும் பல பதிகளையும், அவன் இயல்புகளையும் நமக்கு எடுத்துரைக்கிறது. தமிழர்களுடைய உருவ வழி பாட்டு முறைகளையும் சமயக்கோட்பாடுகளையும் காட்டுகிறது.

"பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான்" (2—67—1)

"சேந்தனைமுன் பயந்துலகில் தேவர்கள்தம்
பகைகெடுத்தோன் திகழுமூரே (2—74—6)

என்பனவற்றிலும் பிறவிடங்களிலும் சிவபெருமான் கொற்றவையை மனைவியாகக் கொண்ட செய்தியை யும், முருகனை மகனாகக் கொண்ட செய்தியையும் திரு ஞான சம்பந்தர் கூறுகிறார். சிவபெருமானும் கொற்ற வையும் முருகனும் தமிழர்கள் வழிபடும் தெய்வங்களா வர். இம் மூவரும் பெயரளவில் வேறு பட்டவர்களே யன்றிப் பொருண்மையில் வேறுபட்டவரல்லர்; மூவரும் ஒருவரேயாவர். தமிழர் வழிபாடு ஒரு கடவுள் வழி பாடாவதன்றிப் பல கடவுள் வழிபாடன்று. செந்தமி ழோர்கள் பரவி ஏத்தும் சீர்கொள் செங்காட்டங் குடி (1-6-9) என்று தமிழர் சிவபிரானை வழிபட்ட சிறப்பைச் சம்பந்தர் புகழ்ந்து பாடுகிறார்.

## வழிபாடு

திருஞானசம்பந்தர் சீர்காழிப் பதியில் பிறந்தார்; "தோடுடைய செவியன்" எனற முதல் திருப்பதியத் தைப் பாடிச் சிவபெருமான் காட்சியைக் கண்டு மகிழ்ந் தார். அதன் பின், சிவ பெருமான் கோவில் கொண் டிருக்கும் பல பதிகளுக்கும் சென்று வணங்கிப் பல பதி யங்கள் பாடினார். பொற்றாளம், முத்துச் சிவிகை,

முத்துச் சின்னம், முத்துக் குடை, படிக்காசு முதலியன பெற்றார். சமணரை வென்று சைவ சமயத்தை நிறுவினார். திருஞானசம்பந்தர் பாடல்கள் அவர் சிவபெருமானிடம் வைத்துள்ள அயரா அன்பைக் காட்டுகின்றன.

உடையானை யல்லது உள்காதென் உள்ளமே
(2—14—1)

குறையுடை யான்குறட் பூதச் செல்வன்
குரைகழ லேகைகள் கூப்பி னேமே (1—5—8)

பெற்றம ரும்பெரு மானையல்லால்
பேசுவ தும்மற்றோர் பேச்சிலோமே (1—5—9)

ஆமாத்தூர் அம்மானைக்
காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே
(2—44—4)

கூறாத நாவெல்லாம் கூறாத நாக்களே (2—44—7)

கேளாச் செவியெல்லாம் கேளாச் செவிகளே
(2—44—8)

பெம்மானென் றேத்தாதார் பேயரில் பேயரே
(2—44—2)

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழு தெழுவேன் (3-4-1)

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான் (3—4—3)

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே
(2—106—1)

திருஞானசம்பந்தர் தமிழ் மக்கள் தங்கள் கடவுளாகிய சிவபெருமானை வழிபட்ட செய்திகள் பலவற்றை நமக்கு எடுத்துரைக்கிறார். தமிழர்கள் தாம் வாழ்ந்த ஊர்கள்தோறும் சிவபெருமானுக்குக் கோவிலெடுத்

தனர்; கோவில்களுக்குச் சென்று மகளிர்களும் ஆடவர்களும் வலம்வந்து நடமாடி வழிபட்டனர்; கை கூப்பியும் தலையால் வணங்கியும் வழிபட்டனர்; நாவினால் எந்தை, ஈசன், எம்பெருமான், ஏறமர் கடவுள் என்று நவின்று வழிபட்டனர்; இடரினும் தளரினும் சிவபெருமானைத் தொழுதெழுந்தனர்; கனவினும் நனவினும் சிவனை மறவாது வழிபட்டனர்; உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் சிவனடிகளை நினைந்தனர்; கோவில் கொண்டிருக்கும் சிவபிரானுக்கு நீரெடுத்துச் சென்று நீராட்டி, மலர் பறித்துச் சென்று மலர் தூவி, தூபமும் தீபமும் காட்டி வழிபட்டனர்; ஐம்பொறிகளை அடக்கிச் சுரும்பார் மலரெடுத்து இண்டை கட்டிச் சூட்டி வழிபட்டனர்; காவினை யிட்டும் குளம் பல தொட்டும் கனி மனத்தால் பூவினைக் கொய்தும் போற்றினர்' பூக்களை தலையில் சுமந்து சென்று சிவபிரானுக்குச் சூட்டியும், அவன் புகழ்களையும் பெயர்களையும் காதுகளால் கேட்டும் நாவினால் சொல்லியும் வழிபட்டனர்; கோவில்களிலுள்ள முக்குளம் போன்ற குளங்களிலும் கோவில்களுக்கருகிலுள்ள காவிரி முதலிய ஆறுகளிலும் மூழ்கி நீராடிச் சிவபெருமானை வழிபட்டனர்.

திருஞானசம்பந்தர் சிவபெருமானை வணங்கி வழிபடுதலைத் தம் நெஞ்சினுக்கு அறிவுறுத்துகிறார்.

பாடல் வண்டு பயிலும் நறையூரில்
சேடர் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே (1-29-4)

படைகொள் கூற்றம் வந்துமெய்ப் பாசம் விட்டபோதின்கண்
இடைகொள் வாரெமக்கிலை; எழுக; போது நெஞ்சமே
(2-100-4)

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய், யாரறிவார்?
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே(2-41-3

திருஞானசம்பந்தர் சிவபிரானை வணங்கி வழிபடுமாறு மக்களுக்கு அறிவுறுத்துகிறார்; மக்களுக்கு உண்டாகும் யாக்கை நிலையாமையைக் காரணங் காட்டுகிறார்.

சித்தந் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே (1-91-1)

அரனை யுள்குவீர், பிரம னூருளெம்
பரனை யேமனம், பரவி யுய்ம்மினே (1-90-1)

கண்கள் காண்பொ ழிந்துமேனி
கன்றி யொன்ற லாதநோய்
உண்கிலாமை செய்து நும்மை
உய்த்த ழிப்ப தன்முனம்
விண்கு லாவு தேவருய்ய
வேலை நஞ்சம முதுசெய்
கண்கள் மூன்று டையஎம்
கருத்தர் பாதம் சேர்மினே (2-97-5)

சோறு கூறை யின்றியே
துவண்டு தூர மாய்நுமக்
கேறு சுற்றம் எள்கவே
இடுக்க ணுய்ப்ப தன்முனம்
ஆறு மோர்ச டையினன்
ஆதி யானை செற்றவன்
நாறு தேன்ம லர்ப்பொழில்
நலங்கொள் காழி சேர்மினே (2-97-3)

சிவபெருமானைத் தம் கடவுளாகவும் தம்மை அவனடி வணங்கும் அடியாராகவும் உள்ளத்தில் கொண்டு வணங்கும் மக்கள் (1) தமக்கு வரும் துன்பங்களின் நீங்குகின்றனர்; (2) வினையின் நீங்குகின்றனர்; (3) இன்பம் அடைகின்றனர்; (4) மறு பிறப்பின் நீங்குகின்றனர்; (5) வீடுபேறு அடைகின்றனர் என்று திருஞானசம்பந்தர் பற்பல பாடல்களில் எடுத்தியம்புகிறார்.

(1) எம்மானை ஏத்த வல்லார்க் கிடரில்லையே (2-11-2)
அண்ணலை அடையவல் லார்க்கில்லை அல்லலே (2-11-9)

(2) விளங்கும்பொழில் வீழிம்மிழலை
உளங்கொள்பவர் தம்வினைஓய்வே (1-35-10)

(3) இறையான்என் றேத்துவார்க் கெய்துமாம் இன்பமே (2-46-5)
இன்பா யிருந்தானை ஏத்துவார்க் இன்பமே (2-46-10)

(4) நாலூர் மயானத்து நம்பான்தன் அடிநினைந்து
மாலூரும் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே (2-46-1)

(5) கானமரும் பிணைபுல்கிக் கலைபயிலும் கடம் பூரில்
தானமர்கொள் கையினானைத் தாள்தொழவீ
டெளிதாமே (2-68-1)

## விழா வழிபாடு

தமிழர்கள் தம் ஊர்தோறும் கோவில் கொண்டிருக்கும் சிவபெருமானுக்கு விழா எடுத்து வழிபட்டனர். விழாக்களில் கொடி எடுத்தனர். பொடிகள் பூசித் தொண்டர்கள் சிவபெருமானுக்குப் பின்சென்றனர். ஐப்பசி ஓண விழாவும், கார்த்திகை விளக்கீட்டு விழாவும், மார்கழி ஆதிரை விழாவும், தைப்பூச நீராடு விழாவும், மாசிக் கடலாடு விழாவும். பொற்றுப்பு விழாவும், பெருஞ் சாந்தி விழாவும் சம்பந்தரால் திருமயிலாப்பூர்த் திருப்பதியத்தில் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

## கோட்பாடுகள்

### கடவுள்

சைவ சமயக் கோட்பாடுகள் பல. திருஞானசம்பந்தர் தம் பாடல்களில் சில கோட்பாடுகளைக் கூறுகிறார். (1) சிவ பெருமான் மக்களுக்குக் கடவுள். (2 பிறப்பு இறப்பு இல்லாதவன். (3) உலகத்தினிடத்தும் உயிர்களினிடத்தும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருப்பான். (4) உயிர்களினுடைய பிறவிகளை நீக்குகிறான். (5) தன்னை வந்தடையும் உயிர்களுடைய பாசங்களை நீக்குகிறான். (6) தான் இன்புற்றிருப்பது போலத் தன்னை அடையும் உயிர்களையும் இன்புற்றிருக்கச் செய்கிறான். (7) தன் அடியார்களுக்குப் பல வழிகளில் அருள் செய்து அவர்களை ஆட்கொள்கிறான்.

(1) இறையவன் எனவுலகம் ஏத்தும் கண்டம்
கறையவன் வளநகர் கடைமுடியே (1-111-5)

(2) பிறப்பாதி யில்லான் (1-134-4)

(3) ஆருர் சுவை ஏழோசையோ டெட்டுத்திசை தானய்
வேருயுடன் ஆனனிடம் வீழிம்மிழ லையே (1-11-2)

(4) வாழவல் லார்தமக் கென்றும்
பிறவி யறுக்கும் பிரானர் பெரும்புலி யூர்பிரி யாரே (2-67-8)

(5) தனையொண், தளையாயின தவிரவ் வருள் தலைவன் (1-12-3)

(6) சங்கரனர் தம்மைப்
போலத்தம் அடியார்க்கும் இன்ப மளிப்பவர் (2-10-22)

(7) ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான்புகி லளவில்லை கிளக்க வேண்டா (3-54-4)

## உயிர்கள்

உயிர்கள் பல. அவை 'உரை சேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம் யோனி பேதம்' என்று சம்பந்தரால் கூறப் படுகின்றன. அவை இறைவனுல் படைக்கப் படுகின்றன (1-132-4) பிறவியால் வருவன கேடுகளாகும். (2-79-5) யாக்கை நிலையாமையை யுடையது அது உள்ள பொழுதே சிவபெருமானைத் தொழுது மக்கள் உய்ய வேண்டும் (2-97-3) என்பன சம்பந்தர் கூறும் உயிர்க் கோட்பாடுகளாம்.

## தளைகள்

தலம்நில வியமனி தர்களொடு தவமுயல் தருமுனிவர் கள்தம்
மலம்அறு வகைமனம் நினைதரு மறைவனம் அமர்தரு பரமனே

பசுபாச வேதனை யொண்
தளையாயின தவிரவ் வருள் தலைவன் (1-12-3)

என்பனவற்றில் உயிர்களிடத்துள்ள மலமும் தளையும் கூறப்படுகின்றன. முப்பொருளும் கூறப்பட்டிருக் கின்றன.

——

# அம்பிகை மாலை

(மு. அ.)

மதுராபுரி அம்பிகைமாலை என்பது முப்பது கட்டளைக் கலித்துறைப்பாக்கள் கொண்ட சிறு துதி நூல். மதுரை மீனாட்சி அம்பிகையைத் துதிப்பது. பாடல் ஒவ்வொன்றும் "மதுராபுரி அம்பிகையே" என்று முடிவது. பக்திச் சுவை நிறைந்த எளிய பாடல்கள். இந்நூலின் கடைசிப் பாடலால் இதைப் பாடியவர் குலசேகர பாண்டியர் என்று அறிகிறோம்.

**பிடித்தாரக் கட்டி அணைத்தமு தூட்டிய பேயின்முலை**
**குடித்தாடும் மாயன் குலசேக ரன்வட குன்றைச்செண்டால்**
**அடித்தான் வடித்தசொல் அம்பிகை மாலைஐ யாறுகவி**
**படித்தார்சொல் கற்பகக் காவும்பொன் னாடும் படைத்தவரே.**

குலசேகர பாண்டியர் என்று பெயர் படைத்த பாண்டிய மன்னர் பலர், 13ஆம் நூற்றாண்டு முதல் இருந்திருக்கிறார்கள். அவருள் இக்குலசேகரன் இன்னாரென்று திட்டமாய் இங்குக் குறிப்பிட முடியவில்லை. காலத்தால் மிகவும் பிற்பட்ட ஒரு குலசேகர மன்னராகக் கொண்டாலும் இக்குலசேகரன் 16ஆம் நூற்றாண்டில் (1551–64) இல் அரசாண்ட சாலிவாடிப்பெருமாள் குலசேகரராக இருத்தல் கூடும். இப்பாண்டியன் அதிவீர ராமன் தந்தை. அதிவீர ராமனும் வரதுங்கராம பாண்டியனும் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து சிவமணம் கமழ்கின்ற சிறந்த நூல்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் நூல் செய்யுமளவு புலமையும் பக்திப் பெருக்கும் விளையக் காரணம் அதிவீரர் தந்தையும் வரதுங்கர் சிறிய தந்தையுமாகிய குலசேகரர் என்றே கருதலாம். வரதுங்க ராமபாண்டியர் இக்குலசேகரருடைய தமையன் பராக்கிராமனுடைய புதல்வர்.

அம்பிகை மாலையானது சமீபகாலம் வரையில் தமிழ் நாட்டில் சிறப்பாகப் பாண்டிய நாட்டில், கல்வி பயிலும் சிறார்கள் மனப்பாடம் செய்யும் தோத்திர நூலாக

இருந்து வந்தது. அதுபோலச் சோழ நாட்டிலிருந்த நூல் அபிராமி பட்டர் பாடிய அபிராமி அந்தாதியாகும். அபிராமி பட்டர் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையில் ஆண்ட சரபோஜி மன்னன் காலத்தில் அவனால் பெரிதும் அபிமானிக்கப்பட்டு வாழ்ந்தவர். அவர் திருக்கடவூர் அபிராமி அம்பிகை திருவருளைப் பெற்று எந்த நேரமும் அம்பிகையின் தியானத்திலேயே மூழ்கியிருந்தவர்.

அவர் இவ் வந்தாதி பாட நேர்ந்த வரலாறு எல்லோரும் அறிந்தது. அவர் மீது பொறாமை கொண்ட சிலர், அவர் சத்தி வழிபாட்டினர். மக்கள் நடத்தைக்குப் புறம்பான செயல்களிலும் ஈடுபட்டவர் என்று மன்னனிடம் கோள் சொல்லி வந்தனர். அவர்கள் கூற்றைச் சோதிக்க எண்ணிய அரசன், ஒருசமயம் திருக்கடவூர் வந்தபோது, பட்டரைக் கண்டு, "இன்று என்ன திதி?" என்று வினவினான். அன்று அமாவாசையாக இருந்தும் அந்த நினைவேயில்லாத பட்டர், தாம் எந்த நேரமும் இறைவியினுடைய திருவருட் பிரகாசத்தை ஞானக் கண்ணால் கண்டு கொண்டிருந்தமையால் இந்த நினைவோடு, "பௌர்ணமி" என்று யோசிக்காமல் விடை சொல்லி விட்டார். அரசர் நகைக்கவே, பட்டர் உண்மையை உணர்ந்து தம் தவற்றிற்கு வருந்தி அபிராமியைத் துதிக்கலானார். அந்தத் துதியே அபிராமி அந்தாதி. அவர் தோத்திரத்திற்கு மகிழ்ந்த அம்பிகை தன் காதில் அணிந்திருந்த தோட்டை வானத்தில் வீசியெறிந்து அதனுடைய பேரொளியால் பட்டருக்கும், அரசனுக்கும் பூரண சந்திரன் உதயத்தைக் காட்டினாள் என்பது வரலாறு.

அபிராமி அந்தாதி அநேக சைவ மக்கள் பாராயணம் செய்து தேவியை வழிபடுகின்ற தோத்திர நூல். இதன் பாராயணத்தினால் நம் கண் முன்னே அநேகர் பெறுதற்கரிய பேறுகளை யெல்லாம் பெற்றிருக்கிறார்கள். இந்நூல் நல்ல நடையில் அமைந்தது இதன் சிறப்பாகும். பட்டர் சிறந்த பக்திமான் மட்டுமின்றி, சிறந்த கல்விப் புலமையும்

உடையவர் என்று அவர் நூலைப் படிக்கும்போது அறிகிறோம். கட்டளைக் கலித்துறை நூறு பாடல் பாடிய அவர் சொல் நயம், பொருள் நயம், சமய நுட்பம், பக்திச் சுவை முதலிய எல்லா நயங்களும் அமைய நூலைச் செய்திருக்கிறார்.

இந்நூலையும் முதலில் குறித்த அம்பிகை மாலையையும் ஒருங்கு சேர்த்து நாம் பார்க்கும்போது, பட்டர் தமக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட அம்பிகை மாலையை நன்கு பயின்றிருப்பார் என்று கருதத் தோன்று கிறது. அதிலுள்ள சொற்களும், தொடர்களும், பொருளும் அம்பிகை மாலையிலிருந்து அப்படியே எடுத்தமைக்கப் பட்டவை போலத் தெரிகின்றன.

இவ்வாறு சொல்வதனால், பட்டர் சக்தியின் அருள் பெற்றுப் பாடினார் என்ற கருத்துக்குக் குறைவு ஏற்படாது. "கடாட்சம் என்பதில் பாதி கடின உழைப்பு" என்று ஆங்கிலத்தில் புலமை சம்பந்தமாக ஒரு பழமொழி யுண்டு. ஆகவே பட்டர் நன்கு கற்ற புலவராய் இருந்தார். அம்பிகையின் கடாட்சமும் பெற்றிருந்தார் என்பது பொருந்தும்.

இனி இரு நூல்களையும் சிறிது ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஒவ்வொரு பாடலையும் எடுத்துக் காட்டாகக் கூறலா மாயினும், இங்கு சில மட்டும் கூறி அமைவோம்.

**இணங்கேன் ஒருவரை, நின்னிரு தாளன்றி யெப்பொழுதும்**
**வணங்கேன், ஒருவரை வாழ்த்துகி லேன்வஞ்சநெஞ்சருடன்**
**பிணங்கேன்**

என்பது அம்பிகை மாலை 87;

**வணங்கேன் ஒருவரை, வாழ்த்துகிலேன் நெஞ்சில்**
**[வஞ்சகரோடு**
**இணங்கேன் எனதுஉனது என்றிருப் பார்சிலர் யாவருடன்**
**பிணங்கேன்**

என்பது அந்தாதி. "கரும்புங் கணையைந்தும் பாசாங்கு சமுங்கைக் கொண்டு அடியேன் றிரும்புந் திசைதோறுந் தோற்று கண்டாய்"—மாலை 3; "பார்க்கும் திசை தோறும் பாசாங்குசமும், பனிச்சிறை வண்டு, ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும், என் அல்லல் எல்லாம், தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும்"—அந்தாதி 85? "நுங்கேள்வர் பாகத்தும் அந்நான்மறையெனும் நூலிடத்தும், கொங்கேய் பொருட்டுக் கமலாலயத்துங் குடி கொண்ட நீ"—மாலை 18; "நின் திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ, அறைகின்ற நான்மறையின் அடியோ, முடியோ........... கஞ்சமோ"—அந்தாதி 20. "சடாடவியார் உண்ட காளவிடத்தை அமுதாக்கும் சிவானந்தமே மதுராபுரி அம்பிகையே"—மாலை 26; "வார்சடையோன் அருத்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை"—அந்தாதி 5. "உன்னடிக்கே பொழியாப் புதுமலரிட்டு நிற்பார்க்கு அழியாப் பதம் தருவாய்"—மாலை 23, புதுமலரிட்டுநின் பாதவிரைக் கமலம் இரவும் பகலும் இறைஞ்ச வல்லார் இமையோர் பரவும் பதமும்........... உடையவரே"—அந்தாதி 83. "வலிய வந்ததென் தலைக்கேய் பதம்வைத்த தண்ணளியாய்"—மாலை 12; நின் பாதம் என்னும் வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு"—அந்தாதி 32.

இவ்வாறு இன்னும் பல சொற்றொடர், கருத்து ஒற்றுமைகளைக் காட்டவியலும்.

இவற்றால் நாம் காண்பது, அபிராமி பட்டர் "மதுராபுரி அம்பிகை மாலை" என்ற நூலில் மிகவும் தோய்ந்திருந்தார் என்பதாகும். குலசேகர பாண்டியர் பக்திச் செல்வம் படைத்த பாண்டியர் மரபில் வந்தவர். அவர் பாடிய அம்பிகை மாலை, அபிராமி அந்தாதிக்கு மூலநூல் என்று சொல்லத் தக்க பெருமை வாய்ந்தது. முப்பதே பாடல். சைவ மக்கள் இதனையும் அன்போடு பயின்று அம்பிகையின் கருணைக்குப் பாத்திரமாவார்களாக.

—(:o:)—

# விநாயக தத்துவம்

[கோ. மு. முத்துசாமி பிள்ளை]

"ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்" என்னும் கொள்கை யுடைத்து சைவ சமயம். எனினும் இத்தகைய தெய்வம் மணிவாசகனார் கூறுவது போன்று ஓர் உருவம் ஓர் நாமம் இல்லாதது எனினும் ஆயிரம் நாமம் கூறி வழிபடுகிறோம். இத் தெய்வம் பல்வேறு காலங்களில் பல்வேறு ஞான மயமான திருமேனியைத் தமது இச்சை யால் கொண்டு அடியார்களுக்கு அருள் புரிந்து பின் மறைந்துவிடும். இவ்வாறு ஒப்பற்ற தெய்வம் கொண்ட வடிவங்களில் ஒன்று விநாயக மூர்த்தம். விநாயகர் என்னும் சொல், வி = மேலான, நாயகர் = தலைவன் என் பதாக மேலான தலைவர் என்னும்பொருள் தாங்கியுள்ளது.

விநாயகர் பிரணவப் பொருள். இப்பிரணவம் "ஓம்" என்பதாகும். எல்லாப் பிராணிகளையும் பரம் பொருளிடம் சேர்க்கும் காரணமாக இம் மந்திரத்திற்குப் பிரணவம் என்ற பெயர் வந்ததென அதிர்வசிர உப நிஷத் கூறுகிறது. "ஓம்" என ஓதிய வுடனே அவ்வாறு ஓதுகின்றவரை பரம்பொருளாகிய மேல் நிலைக்கு இம் மந்திரம் கொண்டு போய்ச் சேர்க்கிறதென இதே உப நிஷத் கூறுகிறது. இதே கருத்தை, எல்லாவற்றையும் ஓம்புதலால் (காப்பாற்றுதலால்) இதற்கு ஓம் என்ற பெயர் அமைந்ததெனக் கூர்ம புராணம் வலியுறுத்து கின்றது. ஓம் என்பதில் "அ" "உ" "ம்" என்பன உள்ளன. 'அ' என்பது சிவம்; 'உ' என்பது சத்தி; 'ம்' என்பது மலம் கலந்த உயிர். உலகம் தொழிற் படவும், உயிர்கள் மலம் நீங்கிப் பரம்பொருளை அடையவும், வழி வகுக்க அப் பரம்பொருள் தம்முள் தாமே ஓர் ஞான சக்தியைத் தோற்றுவித்துக் கொண்டது. அந்த நிலையே பிரணவம்; அது பெற்றுக் கொண்ட வடிவமே விநாயகர். இப் பிரணவம் தோன்றியது அப் பரம்பொருளின் கண் டத்தில் என வாதுளஆகமம் கூறுகிறது. இப்பேருண் மையை விளக்க எழுந்தன புராணங்கள். கயிலைச் சித்திர மண்டபத்தில் எழுதப் பெற்ற பிரணவத்தில் உள்ள இறைவன் எழுத்தாகிய "அ" என்னும் எழுத்து ஆண்

யானையாகவும் (களிறாகவும்) "உ" என்னும் சத்தியின் எழுத்து பெண் யானையாகவும் (பிடியாகவும்) உருப்பெற்ற தன் காரணமாக விநாயகர் அவதரித்தார் எனக் காஞ்சிப் புராணமும் கந்த புராணமும் கூறும்.

இவ்வாறு சிவபெருமான் விநாயகரைத் தோற்றுவித்த தால் அப் பெருமானுக்கு விக்கினேசுவரானுக்கிரகர் என்னும் மூர்த்தம் ஏற்பட்டது. இம் மூர்த்தம் அவரு டைய சந்திரசேகரர் முதலிய இருபத்தைந்து மூர்த்தங் களுள் ஒன்றாகும்.

இக்கருத்தை

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசும் கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்
வாய்மூர் அடிகளை நான் கண்ட வாறே.'

என அப்பர் எடுத்துக் காட்டுகிறார்.

விநாயகருக்கு யானை முகமும் மூன்று திருக் கண் களும் ஐந்து திருக் கரங்களும் அக் கரங்களில் தந்தம் பாசம், அங்குசம், மோதகம் ஆகியவையுமுள்ளன. இவ ரிடம் ஒற்றைத் தந்தமும் மும்மதங்களும் இரண்டு திரு வடிகளும் உள்ளன. ஆன்மாக்களின் மும்மலங்களையும் போக்கும் ஆற்றல் உடையவர் என்பதற்காக, அவர் ஒற்றைக் கொம்பும் அதுவும் முறிக்கப் பட்ட நிலையில் வைத்துள்ளார். ஆன்மாக்களின் ஆணவ மல மாகிய யானையைப் பாசத்தால் பிணைத்து, அங்குசத்தால் அடக்கி ஆள்பவர் என்பதைத் தெரிவிக்கும் வகையில் உள்ளது. இதை

"கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரிசினேற் கிருகையு மாக்கும்
அண்ணலைத் தணிகை வரைவள ராபற்
சகாயனை யகந்தழீஇக் களிப்பாம்"

என விளக்குகிறது தணிகை புராணம்,

கயமுகாசுரன் தனது மல வலி கெட்டபின் பெருச் சாளி வடிவில் வந்தான். அப்போது அவனுக்கு ஞானத்தை நல்கி அவனை வாகனமாகக் கொண்டார் விநாயகர். அடியார்கள் தங்கள் பசு ஞானத்தைக் கவள மாக்கி ஒப்புவிக்க, அதை யுண்டு தமது திரு வயிற்றில் அடக்கி, தம் அடியார்களுக்குச் சிவ ஞானம் அளிக்கின் றார் விநாயகர். இக்கருத்து

"உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரிய வன்பெனும் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்"

பிரணவ வடிவமாகிய சிவலிங்கம் அமைந்திருப்பது போல, விநாயகப் பெருமானது திருமுகம் பிரணவ வடிவாக அமைந்திருக்கின்றது. சிவலிங்கத்திலுள்ள ஆவுடை யார் பாகம் வட்ட வடிவமாய் விந்து தத்துவத்தைக் குறிக்கும். இலிங்கம் நீண்ட வடிவமாய் நாததத்து வத்தைக் காட்டும். விநாயகப் பெருமான் துதிக்கையின் நுதி வட்ட வடிவமாய் விந்து தத்துவத்தையும் அதன் மேல் பாகம் நீண்ட வடிவாய் நாதத்தையும் குறிக்கும்.

சிவ பெருமான் கொண்ட மூர்த்தங்களுள் (உமை யொரு பங்கன்) அர்த்தநாரிஸ்வர மூர்த்தம் ஒன்று. இடப் பாகம் அம்மை பாகமாகவும் வலப் பாகம் சிவ பெரு மான் பாகமாகவும் உள்ளது. விநாயகப் பெருமானின் ஒரு பக்கம் கொம்புள்ளது. (களிற்றின் பாகம்) இது ஆண்பாகம், இதர பக்கத்தில் (பிடியின் பாகம்) கொம் பில்லாமை இது பெண் பாகமாகவும் உள்ளது.
இவ்வுண்மையை,

"வெண்ணிலாக் கற்றை கான்று
விளங்குமோர் பிறைக்கோ டின்றி
யெண்ணிலோர் பாகங் கூந்தற்
பிடியென விருந்த வாற்றுற்
பெண்ணொரு பாகம் வைத்த
பிஞ்ஞக னுருவு காட்டு
மண்ணலங் களிநல் யானை
மலரடி சென்னி வைப்பாம்"

என்று கூர்ம புராணப் பாடல் விளக்குகிறது.

சிவபெருமான் ஞானாசாரியராக உபதேசம் செய்தது போன்று விநாயகப் பெருமானும் மெய்கண்ட தேவர், நம்பியாண்டார் நம்பிக்கும் அருளுபதேசம் செய்தருளினார். மற்றவர்கள் பற்பல காலங்களில் நன்மை யடைந்துள்ளார்கள்.

"எந்தையே ..................
சந்தமறை முதற்கலைக ணியே யோதித்
தரல்வேண்டு மென வேழமுகத் தோன்றலு
மந்தமற வோதுவிக்க வோதி நம்பி மகிழ்ந்தனன்"

எனத் திருமுறை கண்டபுராணம் கூறுவதிலிருந்து இதை அறிந்து கொள்ளலாம்.

அடியார்களுக்குக் கற்பகம் போன்று அருள் பாலிப்பவர் விநாயகர். கயமுகாசூரனைக்கொன்று தேவர்களுக்கும் உலக மக்களுக்கும் பாதுகாப்பளித்தவர். இவ்வகையில் திருச்செங்காட்டங்குடியில் அமர்ந்து அருள் புரிபவர் சிவ பெருமானை வலம் வந்து உமையம்மையாரிடமிருந்து மாதுளங் கனியைப் பரிசாகப் பெற்றவர்; வியாச முனிவர் வணங்கிக் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பாரதம் முழுவதையும் மேரு மலையில் தமது தந்தத்தை எழுதுகோலாகக் கொண்டு எழுதியவர். யானைக் கோலத்தில் முன்தோன்றி வள்ளி நாயகியை முருகப் பெருமானிடம் சேர்த்தவர்; மந்தர மலையை மத்தாக்கித் தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்த காலத்து அம்மத்தைத் தாங்கி உதவிய ஆமையினின்று எழுந்த பேராபத்தைத் தவிர்க்க, அக்கடல் நீரை அந்த ஆமையுடன் உறிஞ்சி

அப்புறப்படுத்தியவர்; யாதொரு செயலிலும் ஈடுபடு முன் விநாயகரை வணங்கித் தொழுவது வழக்கமாய் விட்டது. இவ்வகையில் அன்னுரை வணங்கும் முறையில் ஒரு சுழி வரைவது பண்டைக் காலத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. இவரது சந்நிதியில் நாம் செய்த குற்றங்களுக்கு நாமே நம்மைத் தண்டித்துக் கொள்ளும் முறையில் நாம் குட்டிக்கொள்கிறோம். இனி மேல் தவறு செய்வதில்லை என்று தெரிவித்துக்கொள்ளும் உண்மையும் இதில் உள்ளது.

விநாயகர் வேதங்களுள் பழமையான ருக் வேதத்தில் "கணனும்த்வாம் கணபதிம் அவாமஹே" என்பதாகப் பேசப்படுவதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். தைத்திரீய ஆரண்யகத்தில் "தந்திந்" எனக் கூறப்படுகிறது. இதன் பொருள் தந்தத்தை யுடையவர் என்பதாகும். விநாயகர் வழிபாட்டைப் பற்றிப் பல்லவர்களுக்கு முற்பட்ட இலக்கியங்களில் கூறப்படவில்லை என்பது ஆராய்ச்சியாளர்கள் கண்ட உண்மையாகும். கபிலதேவ நாயனரும் அதிரா அடிகளும் விநாயகர்மீது செய்யுட்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் பன்னிருதிருமுறைகளில் 11ஆவது திருமுறையில் இரு பிரபந்தங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இவர்களையன்றித் திருமூலர், அருணகிரியார், அதிரா அடிகள், அருணந்தி சிவாசாரியார், கச்சியப்ப சிவாசாரியார், பரஞ்சோதியார், கச்சியப்ப முனிவர், வில்லிப்புத்தூராழ்வார் சிவஞான சுவாமிகள் போன்ற பெரியோர்கள் விநாயகப் பெருமானிடம் அருள் பெற்றுப் பாடியுள்ளார்கள்.

"உயர்திணையு மஃறிணையும் படைத்தளித்துத்
துடைக்குமுத லொருதானே,யென்
றயர்வறவெத் தகையோடு மறிந்துய்யத்
தெரிக்குமடை யாளமேய்ப்ப
பெயர்கொளுயர் திணையுமஃறிணையும்
விரவிய வுருவிற் பிறங்குவானை
மயர்வடிய வர்க்ககற்று மொருமருப்பானை
விநயகனை வணங்குவாமால்"

— சூதசங்கிதை